**செய்தி வெளியீடு எண்:1349** **நாள்:15.12.2021**

# செய்தி வெளியீடு

## சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

## 'தொல்காப்பியப் பூங்கா'

தமிழ்நாடு அரசு, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம், 58 ஏக்கர் பரப்பினை கொண்ட அடையாறு உப்பங்கழியினை சீரமைத்து, தொல்காப்பியப் பூங்கா என்ற சுற்றுச்சூழல் பூங்காவை உருவாக்கி, பராமரித்து வருகிறது. நகரிய கடல்சார் ஈரப்புலங்களின் பாதுகாப்பு மற்றும் சீரமைப்பின் அவசியத்தை பொதுமக்கள் உணர்ந்து கொள்ள ஏதுவாக, தொல்காப்பியப் பூங்காவை பொதுமக்கள் பார்வையிட வாரத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போது, தொல்காப்பியப் பூங்காவில், பொதுமக்கள் கட்டணத்துடனான நடைப்பயிற்சி மேற்கொள்ள, காலை 6.30 மணியிலிருந்து 8.00 மணி வரை மற்றும் மாலை 4.30 மணியிலிருந்து 6.00 மணி வரை அனுமதிக்கப்பட உள்ளனர்.

நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கான விண்ணப்ப படிவத்தை தொல்காப்பியப் பூங்காவின் இணையதளத்தில் www.chennairivers.gov.in பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கீழ்க்கண்ட பூங்கா அலுவலகத்தில் படிவத்தை பெற்று கொள்ளலாம்.

தொடர்புக்கு

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை
தொல்காப்பியப் பூங்கா,
எண்.6/103, டாக்டர் டிஜிஎஸ் தினகரன் சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600028.
தொடர்பு எண்: 044-246 145 23 / 97865 58397 / 98408 13321

**முதன்மை செயலர் / உறுப்பினர் செயலர்**
**சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**